# திருவாரூர்- மேல்நிலை பொது தேர்வில்(12 ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வேலைவாய்ப்பு பதிவினை தாங்கள் பயின்ற பள்ளியிலேயே பதிவு செய்யலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தங்களது கல்வித்தகுதியினை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு பதிலாக இவ்வாண்டில் தங்கள் பயின்ற பள்ளியிலேயே கணணி வாயிலாக ஆன் லைன் மூலம் வேலைவாய்ப்பு பதிவு மேற்கொள்ள சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாமல் மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தங்களது பள்ளிகளில் மதிப்பெண் பட்டியல் பெற செல்லும்போது தங்களது குடும்ப அடையாள அட்டை அசல் மற்றும் செராக்ஸ் நகலுடன் சென்று வேலைவாய்ப்பு பதிவினை அந்தந்த பள்ளிகளிலேயே ஆன்லைன் மூலமாக பதிவினை மேற்கொண்டு வேலைவாய்ப்பு அடையாள அட்டையினை உங்கள் பள்ளியிலேயே பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சியினை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஏற்கனவே பதிவு செய்து இக்கல்வியாண்டில் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மதிப்பெண் பட்டியல் பெற தங்களது பள்ளிக்கு செல்லும் போது தங்களது வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டை அசல் மற்றும் நகல் மற்றும் குடும்ப அடையாள அட்டை அசல் மற்றும் நகலுடன் சென்று தத்தம் பள்ளியில் வேலைவாய்பபு அலுவலக பதிவினை ஆன் லைன் மூலமாக மேற்கொண்டு உங்களது வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையினை உங்கள் பள்ளியிலேயே பெற்று கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்பு அலவலகத்தில் பதிவு செய்ய விரும்பும் மாணவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு செல்ல தேவையில்லை எனவும் மதிப்பெண் பட்டியல் பெற செல்லும்போது மேற்கூறிய ஆவணங்களுடன் தான் பயின்ற பள்ளிக்கு சென்று கணணியில் ஆன்-லைன் மூலமாக பதிவினை மேற்கொண்டு தங்களது அடையாள அட்டையினை தங்கள் பள்ளியிலேயே பெற்று கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார். பதிவு செய்யும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும் தேதி பதிவு முப்பாக கணக்கில் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருவாரூர்**